தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 73/2025

11.03.2026

LW : 13 PW : 13

**திரு. பன்னீர்செல்வம், த/பெ. குழந்தைவேலு**

**எதிரிகள் 1 மற்றும் 2 வரை ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி பன்னீர்செல்வத்தை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.**

**முதல்விசாரணையின் தொடர்ச்சி**

நகைக்கடன் வாங்கமலேயே கடன் வழங்கியதாக பொய் கணக்கு எழுதி சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

**அ) நகைக்கடன் (பொது) நாள் 14.06.2013 ரூ. 49,800/- ரொக்கப்புத்தகம் பொய் கணக்கு எழுதி**

**ஆ) நகைக்கடன் (விவசாயம் ) நாள் 30.10.2014 ரூ. 10,50,000/-**

சங்கத்தில் கடன் வழங்கியதில் 14.06.2013 ல் ரொக்கப்புத்தகம் பக்க எண் 17 ன் கீழ் அங்கத்தினர் நகைக்கடன் (பொது) என்ற தலைப்பில் துணை தினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு வழி என ரூ. 75,900/- நகைக்கடன் வழங்கப்பட்டதாக பற்று எழுதி **அத்தொகை ரூ. 75,900/- ரொக்கப்புத்தகத்திலும் பற்று எழுதப்பட்டுள்ளது. அத்தொகை ரொக்கப்புத்தகம் வரிசை எண்.7 பக்க எண்.17 அ.த.சா.ஆ. 46 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆனால் வரிசை எண்.15 பக்க் எண்.4 ல் துணை தினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு நாள் 14.06.2013 ல் இவ்வினத்தில் உள்ள ரூ. 75,900/- ல் ரூ.49800/- திரு,எஸ்.பி, துரை என்பவருக்கு கடன் வழங்கப்பட்டதாக கணக்கு எழுதப்பட்டுள்ளது, **அத்தொகை துணை பதிவேடு வரிசை எண்.15 பக்க எண்.4 அ.த.சா.ஆ. 47 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆனால் பற்று சீட்டு ஏதுமில்லை. அந்த கணக்கில் எவர் ஒருவரும் கையொப்பமிடவில்லை.

இது குறித்து பரிசீலத்தில் நகைக்கடன் (பொது) பேரேட்டில் 14.06.2013 ல் கடன் எண் 1018 ன் படி பக்க எண்.24 ல் என். துரைராஜ் என்பவருக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டதாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் கடன் எண்.1019 படி கடன் பேரேடு கடன் பேரேடு பக்கம் எண்.25 ல் எஸ். நடராஜன் என்பவருக்கு 27.07.2013 ல் தான் கடன் வழங்கப்பட்டதற்கான பதிவு உள்ளது. இவற்றால் ரொக்கப்புத்தகத்தில் எஸ்.பி.துரைக்கு ரூ.49,800/- நகைக்கடன் வழங்கப்படாமலே கடன் வழங்கப்பட்டதாக பொய் கணக்கு எழுதி

ரூ.49,800/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. **அத்தொகை நகைக்கடன் (பொது) பேரேடு வரிசை எண்.26 பக்க எண்.24 அ.த.சா.ஆ. 48 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதனை எதிரி தினகரன் தனது வாக்குமூலத்தில் 07.07.2015 தேதி பக்கம் எண் 39 மற்றும் 40 ல் ஒப்புக்கொண்டார். **அந்த வாக்குமூலம் வரிசை எண் 35 பக்க எண் 1 முதல் 54 வரையிலான பக்கங்கள் எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் அ.த.சா.ஆ. 49 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சங்கம் கடன் வழங்கியதில் 30.10.2014 ல் ரொக்கப்புத்தகம் பக்க எண் 51 ல் அங்கத்தினர்கள் விவசாய நகைக்கடன் என்ற தலைப்பில் துணை தினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு படி பக்க எண் 99 ன் படி ரூ.10,50,000/- கடன் வழங்கப்பட்டதாக பற்று எழுதி அதில் திருத்தங்களை செய்து கணக்கு எழுதி முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு கடன் பெற்றவர்கள் என துணை தினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு பக்கம் எண்.99 ல் குறிப்பிட்டுள்ள 7 நபர்களுக்கு தலா ரூ.1,50,000/- வீதம் ரூ.10,50,000/- வழங்கப்பட்டதாக கணக்கை எழுதி முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த பேரேட்டில் எவர் ஒருவரும் கையொப்பமிடமில்லை. மேலும் அந்த பேரேட்டில் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்ட கடன் எண்கள் குறிப்பிடப்படவில்லை.

மேலும் அவர்களிடமிருந்து பெற்ற பற்றுச்சீட்டுகள் ஏதுமில்லை. **துணை தினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு வரிசை எண்.16 பக்க எண் 99 ல் கடன் வழங்கப்பட்டதாக சொல்லப்படும் ரூ.10,50,000/- அ.த.சா.ஆ. 50 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது தொடர்பாக விவசாய நகைக்கடன் பேரேடுகளை பரிசீலனை செய்ததில் 2 வது பேரேட்டில் பக்க எண் 25 ல் கடன் எண் 924 நாள் 30.12.2013 க்கு பிறகு கடனே வழங்கப்படவில்லை. இவற்றால் எதிரி 1 தினகரன் தெரிந்தே வேண்டுமென்றே ரொக்கப்புத்தகத்தில் இவ்வினத்தில் பட்டுவாடாக காட்டி, சங்க கையிருப்பை குறைத்து சங்க நிதியில் ரூ.10,50,000/- கையாடல் செய்துள்ளார். **அதன் விவரம் அடங்கிய ரொக்கப்புத்தகம் வரிசை எண் 9 பக்க எண் 17 ல் ரூ.10,50,000/- உள்ள பதிவு அ.த.சா.ஆ. 51 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அவரை விசாரித்தபோது அவர் தனது 07.07.2015 ல் தேதிய வாக்குமூலம் பக்கம் எண் 39 ல் நகைக்கடனே வழங்காமல் பற்றுச்சீட்டு மற்றும் கடன் பத்திரம் பெறாமல் ரூ.10,50,000/- ரொக்கப்புத்தகத்தில் பற்று எழுதி கையாடல் செய்துள்ளேன் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இவற்றால் எதிரி தினகரன் தெரிந்தே வேண்டுமென்றே சங்க கணக்கில் பொய் கணக்கு எழுதி பதிவுகளை திருத்தி, இவ்வினத்தை புதிதாக சேர்த்து

திருத்தங்களை செய்து இவ்வினத்தில் ரூ.10,50,000/- ஐ எதிரி 1 தினகரன் கையாடல் செய்துள்ளார்.

கடந்த 10.01.2015 இணைப்பதிவாளர் புதுக்கோட்டை அவர்கள் தனது குழுவுடன் வந்து பாமணி தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் நகை இருப்பை சரிப்பார்த்தபோது சரிபார்க்க காண்பிக்கப்பட்ட நகை பாக்கெட்டுகளுக்கும் நகை இருப்பு பேரேட்டில் தற்சமயம் பதிவுகள் முடிக்கப்பட்டதில் உள்ள வித்தியாசம் தொடர்பான கீழ்காணும் இனங்களில் கடன் தொகைகள் கடன் பேரேட்டில் வசூல் காட்டப்பட்டும் / வசூலே காட்டப்படாமலும் உள்ள தொகை ரொக்கப்புத்தகத்திற்கு கொண்டுவராப்படாமல் கடன்தாரர்களுக்கு நகைகளை திருப்பி கொடுக்கப்பட் வகையில் சங்க நிதியில் ரூ. 6,45,030/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

விவசாய நகைக்கடன் பேரேடு வரிசை எண் 24 பக்க எண்கள் 290 தேதி 26.11.2012 ந் தேதி கடன் எண்.824 ரூ.1,20,000/- ஐ 30.11.2013 ல் அசல் ரூ.12,000/- கடன் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் இல்லை. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை. விவசாய நகைக்கடன் பேரேடு வரிசை எண் 24 பக்க எண் 338 தேதி 31.12.2012 ந் தேதி கடன் எண்.863 ரூ.1,30,000/- கடன் வழங்கப்பட்டு அதில் 31.08.2012 ல் அசல் தொகை ரூ.1,30,000/- கடன் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் இல்லை. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

விவசாய நகைக்கடன் பேரேடு வரிசை எண் 24 பக்க எண் 378 தேதி 30.12.2013 ந் தேதி கடன் எண்.903 ரூ.88,000/- கடன் வழங்கப்பட்டு அதில் 31.03.2014 ல் அசல் தொகை ரூ.88,000 /- கடன் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் இல்லை. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

விவசாய நகைக்கடன் பேரேடு வரிசை எண் 24 பக்க எண் 304 தேதி 22.12.2012 ந் தேதி கடன் எண்.829 ரூ.84,000/- கடன் வழங்கப்பட்டு ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் இல்லை. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

விவசாய நகைக்கடன் பேரேடு வரிசை எண் 24 பக்க எண் 368 தேதி 13.12.2013 ந் தேதி கடன் எண்.893 ரூ.1,00,000/- கடன் வழங்கப்பட்டு ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் இல்லை. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

வரிசை எண்.24 பக்கங்கள் 290, 338, 378, 304, 368 முறையே ஆக கூடுதல் தொகை ரூ.5,22,000/- **அ.த.சா.ஆ. 52 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நகைக்கடன் (பொது) பேரேடு வரிசை எண் 27 பக்க எண் 25 தேதி 25.05.2011 ந் தேதி கடன் எண்.622 ரூ.11,000/- ஐ 12.09.2013 மற்றும் 17.03.2014 ல் அசல் ரூ.10,500/- மற்றும் 3,500/- வட்டி 1,700 கடன் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் உள்ளது. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

நகைக்கடன் (பொது) பேரேடு வரிசை எண் 27 பக்க எண் 87 தேதி 12.07.2011 ந் தேதி கடன் எண்.684 ரூ.10,000/- ஐ 18.11.2013 ல் அசல் ரூ.10,000/- வட்டி 5,580 கடன் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் உள்ளது. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

நகைக்கடன் (பொது) பேரேடு வரிசை எண் 27 பக்க எண் 182 தேதி 20.01.2012 ந் தேதி கடன் எண்.777 ரூ.45,000/- ஐ 18.12.2013 ல் அசல் ரூ.45,000/- வட்டி ரூ.14,700/- கடன் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் உள்ளது. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

நகைக்கடன் (பொது) பேரேடு வரிசை எண் 27 பக்க எண் 247 தேதி 16.04.2012 ந் தேதி கடன் எண்.842 ரூ.12,050/- (ரூ.10,000/- செலுத்தப்பட்டுள்ளது நீங்கலாக 04.09.2013). ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் இல்லை. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை.

நகைக்கடன் (பொது) பேரேடு வரிசை எண் 26 பக்க எண் 56 தேதி 07.05.2014 ந் தேதி கடன் எண்.1053 ரூ.20,000/- ஆனால் நகை திருப்பி கொடுத்ததற்கு கடன்தாரரின் கையொப்பம் இல்லை. ரொக்கப்புத்தகத்தில் வரவு வைக்கப்படவில்லை. நகைக்கடன் (பொது) பேரேட்டில் வரிசை எண்.26 மற்றும் 27 பக்கங்கள் 25, 87, 182, 247, 56 முறையே கடன் தொகை ரூ.32,050/- அசல் ரூ.69,000 மற்றும் வட்டி ரூ.21,980 ஆக கூடுதல் ரூ.1,23,030 சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. அந்த நகைக்கடன் (பொது) பேரேட்டில் வரிசை

எண்.26 மற்றும் 27 பக்கங்கள் 25, 87, 182, 247, 56 பக்கங்களில் **கடன் தொகை மற்றும் அசல் தொடர்பாக விளக்கம் இல்லை என்பதால் குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனையை பதிவு செய்து அ.த.சா.ஆ. 53 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 10.01.2015 ல் இணைப்பதிவாளர், புதுக்கோட்டை அவர்கள் தனது குழுவுடன் நகையிருப்பு சரிபார்த்தபோது இருப்பில் இல்லை என குறிப்பிட்டுள்ள 79 இனங்களில் வசூலான 75 இனங்கள் போக எஞ்சிய 4 இனங்களில் தொகை வசூலிக்கப்படாத நிலையில் சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தில் தனி அலுவலர் தனது செயல்முறை ஆணை நாள் 05.08.2011 ல் எதிரி 1 மற்றும் எதிரி 3 க்கு உள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் நிர்ணயித்து கொடுத்து அதனை முறையே அவர்கள் 05.08.2011 மற்றும் 06.08.2011 ல் பெற்று கொண்டுள்ளனர். அதன் வழி எதிரி 1 டம் நகைப் பெட்டக சாலி ஒன்று அவரது பொறுப்பில் இருக்கும் என குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே எதிரி 3 க்கான கடமைகளையும் பொறுப்புகளையும் நிர்ணயித்து சங்கத்தில் வழங்கப்படும் நகைக்கடன், நகை பாதுகாப்பு, பெட்டக சாவி ஒன்று பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டியது எனக் குறிப்பிட்டு அவர்களுக்கான கடமைகளையும் பொறுப்புகளையும் நிர்ணயித்து உள்ளார்.

அதன்படி எதிரி 1 நகைப்பெட்டகத்தின் சாவி ஒன்று அவரிடம் உள்ளது என்பதை அவரது வாக்குமூலம் நாள் 07.07.2015 பக்கம் எண் 13 ல் ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வாறே எதிரி அவரது வாக்குமூலம் நாள் 04.07.2015 ல் பக்கம் எண்.5 ல் ஒப்புகொண்டுள்ளார். இவற்றால் இவ்விருவரிடம உள்ள சாவிகளை கொண்டு இருமுறை நகைப்பெட்டகத்தை திறந்தலோ, பூட்டினாலோ மட்டுமே நகைப்பெட்டகத்தை திறக்க இயலும் அல்லது மூட இயலும், இவற்றால் இவ்விருவரும இல்லாது நகைப்பெட்டகத்தை திறந்து நகைகளை பாதுகாப்பிற்காக வைப்பது என்பதோ அல்லது நகைக்கடன்களை முழுமையாக திருப்பி செலுத்தியவர்களுக்கு நகைகளை திரும்ப எடுத்து வழங்குவது என்பதோ இயலாத காரியம் ஆகும்.

அவ்வாறு நகைப்பெட்டகத்தில் வைக்கப்படும் நகைகள் மற்றும் எடுக்கப்படும் நகைகள் எண்ணிக்கை மற்றும் அதன்படிக்கான கடன் தொகையை குறிப்பிட்டும், அவ்வாறு எடுக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் வசூலான தொகையை குறிப்பிட்டும் முறையே பதிவேட்டில் பதிந்து அந்தந்த தேதிகளில் இருப்பில்

நகைப்பாக்கெட்டுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வழி வசூலாக வேண்டிய கடன் தொகைகளை இருப்பாகக் காட்டி அதில் எதிரி 1 மற்றும் எதிரி 3 பராமரித்து வரவேண்டும்,

ஆனால் அந்த பேரேடு பராமரிக்கப்படவில்லை என இணைபதிவாளர் புதுக்கோட்டை அவர்கள் தனது 11.01.2015 தேதிய கடிதத்தில குறிப்பிட்டுள்ளதிலிருந்தும் தற்சமயம் 01.04.2013 ல் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இருப்பு பதிவேட்டிலிருந்தும் நன்கு புலனாகிறது.

இவ்வாறே நகையிருப்பு பேரேடு பராமரிக்கப்படவில்லை என்பது குறித்து எதிரி 1 தினகரனிடம் விசாரித்தபோது அவர் தனது வாக்குமூலம் நாள் 07.07.2015 ல் பக்க எண்.13 ல் நகை இருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்பதும் அதனால் மார்ச் 13 க்கு முன் மாதந்தோறும் அனுப்ப வேண்டிய ஆதார அறிக்கைகளை அனுப்பவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறே எதிரி 3 வி. குமார் தனது 04.07.2015 வாக்குமூலம் பக்க எண் 5 இறுதியில் பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும் சங்க தனி அலுவலரின் அலுவலக ஆணையில் நகைக்கடன் வழங்கவதற்கு கடன் பதிவேடு பதிதல் மற்றும் பத்திரம் பூர்த்தி செய்தல் எதிரி 3 க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவர் நகைப்பெட்டகத்தில் கூட்டு பொறுப்பாளர் என்ற வகையில் எதிரி 1 தினகரன் இந்த பணிகளை தன்னை செய்ய சொல்லவில்லை என தனது 04.07.2015 தேதிய வாக்குமூலம் பக்கம் எண் 3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது சரியல்ல. அவர்களுக்கு கூட்டு பொறுப்பு உள்ளது.

ஏனெனில் இவர் பதிவுகளை செய்யவில்லை என்றாலும் கூட , நகைப்பாக்கெட்டுகளை கடனை திருப்பி செலுத்தியவர்களுக்கு திருப்பி கொடுக்க ஏதுவாக நகைப்பெட்டகத்திலிருந்து திரும்ப எடுத்துக்கொடுக்கும் போது கண்டிப்பாக கடன் தொகை முழுவதுமாக வசூலிக்கட்டதா என்பதை உறுதி செய்த பிறகே, இவர் நகைப்பாக்கெட்டுகளை உரிய கடன்தாரர்களுக்கு திருப்பி கொடுக்க வேண்டும். ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள 10 இனங்களில் 6 இனங்களில் வரவு காட்டப்பட்டிருந்தும் உண்மையில் ரொக்கப்புத்தகப்படி அத்தொகைகள் வரவாகவில்லை.

மேலும் பட்டியல் 8 (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் 4, 5 உள்ள இரு இனங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள 4 பாக்கெட்டுகளுக்கு கடனே வசூலாகவில்லை என்பதுடன் மேலே 8(ஆ) வில் வரிசை எண் 4 மற்றும் 5 ல் குறிப்பிட்டுள்ள கடன் தாரர்களின் நகைப் பொட்டலங்கள் இருப்பில் இல்லை என்பதுடன் அந்த நகை பொட்டலங்களில் உள்ள

நகைகளை அடகு வைத்த நபர்கள் அவர்களிடம் திருப்பி கொடுக்கப்பட்டது என்பதற்கு ஆதாரமாக இவ்விரு கடன்தாரர்களின் கையொப்பம் கடன் பேரேட்டில் பெறப்படவில்லை,

இவற்றால் எதிரி 1 ன் செயல்பாட்டிற்கு இவ்வினத்தில் எதிரி 3 உடந்தையாக செயல்பட்டு கடன் பேரேட்டில் பொய் பதிவுகள் செய்து உரிய கடன்தாரர்களிடம் நகைகள் கொடுக்கப்பட்டதற்கு ஆதாரமாக அவர்களது கையொப்பத்தை பெறாமலும் இனம் 8 (அ) வில் கடன் எண்.829 கடன்தாரர் கடன் பெற்ற போது தமிழில் கையெழுத்திட்டவர் திரும்ப பெறும்போது ஆங்கிலத்தில் கையொப்பமிட்டுள்ளார் என்பதை கண்டுகொள்ளாமலும், கடன் எண் 863 ல் உள்ள கையெழுத்து முற்றிலும மாறுப்பட்டுள்ளது என்பதை கண்டறியாமலும் திருப்பிக்கொடுத்துள்ளனர்.

இது குறித்து எதிரி 1 தினகரனை விசாரித்ததில் அவர் தனது 07.07.2015 தேதிய வாக்குமூலம் பக்க எண் 40, 41, 42 மற்றும் 43 ல் இத்தவறுகளை ஒப்புக்கொண்டு கையாடல் செய்துள்ளதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

இது குறித்து எதிரி வி. குமார் விசாரித்ததில் அவர் தனது 04.07.2015 தேதிய வாக்குமூலம் பக்க எண் 7, 8, 9 மற்றும் 10 இத்தவறுகள் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இவற்றால் இவ்வினத்தில் எதிரி 1 மற்றும் 3 சங்க நிதியில் ரூ.6,45,030/- ஐ ஒருவருக்கொருவர் உடந்தையக செயல்பட்டு கையாடல் செய்துள்ளனர்.

ஆர்.ஜெயபால் எதிரி - 4 சங்க தலைவர் பாமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 09.05.2013 ல் தலைவராக பொறுப்பேற்று இதுநாள் வரை செயல்பட்டு வந்துள்ளார். 2012 – 2013 தணிக்கையறிக்கை பக்க எண் 197 ல் நகைக்கடன்களில் பெற்ற நகைப்பாக்கெட்டுகள் அனைத்தும் நகைப் பெட்டகத்தில் பாதுகாப்பாக உள்ளது எனவும் அதில் உள்ள தொகை பெற்ற கடனுக்கு போதுமான அளவுக்கு ஆதாரமாக உள்ளது எனவும் ஒப்புக்கொண்டு சான்று கையொப்பமிட்டுள்ளார்.

இந்த தணிக்கையறிக்கை பக்க எண் 1 ன் படி 17.12.2013 முதல் 23.12.2013 வரைக்கான காலத்தில் எடுத்து முடிக்கப்பட்டுள்ளது என்பதனால் டிசம்பர் 13 திங்களில் தான் எதிரி 4 தனது கையொப்பத்திற்கு கீழே தேதி குறிப்பிடப்படாத நிலையில் கையெழுத்திட்டு கொடுத்துள்ளார் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சான்று தணிக்கையாளர் தணிக்கையறிக்கைக்காக உண்மை நிலை அறியாது கொடுப்பது சரியாக இருக்காது. ஏனெனில் அவர் சங்கத்தில் 03.03.2014 தேதிய தீர்மானம்

எண் 4 ல் பக்க எண் 87 ல் சங்கத்தில் வழங்கிய நகைக்கடன் தொகை மற்றும் நகைகளை சங்க நிர்வாக க்குழு முன்னிலையில் நகை மதிப்பீட்டாளர் வைத்துக்கொண்டு நகைகளை பரிசோதனை செய்ய ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது என இவரும் மற்ற 6 நிர்வாககுழு உறுப்பினர்களும் கையொப்பம் செய்துள்ளபோது 10.01.2015 ல் இணைப்பதிவாளர் புதுக்கோட்டை இச்சங்கத்தை பார்வையிட்டு நகைப்பெட்டகத்தில் உள்ள நகைகளை பொட்டலங்களை சரிபார்த்து மேலே கண்டுள்ள இனங்கள் (அ) மற்றும் (ஆ) குறிப்பிட்டுள்ள இனங்களை இவரது பார்வைக்கு காட்டப்படவில்லை என்பது போன்ற பல்வேறு நகைக்கடன் வழங்கியதில் தொடர்பாக இச்சங்கத்தில் நிகழ்ந்துள்ள கடும் குறைகளை பதிவாளருக்கு கமுக்க கடிதம் 11.01.2015 தேதி எழுதப்படும் நாள் வரை இச்சங்கத்தின் ஆஸ்திகளுக்கு பொறுப்பான எதிரி 4 ஆர். ஜெயபால் சங்க தலைவர் டிசம்பர் 13 லிலேயே போதுமான ஆதாரம் உள்ள நகைகள் நகைப்பெட்டகத்தில் உள்ளன என்பதை அறிந்தோ அறியாமலோ சான்று செய்திருந்திருந்ததும் கூட 03.03.2014 ல் இருப்பில் உள்ள நகைகளை சரிபார்க்க வேண்டும் என தீர்மானம் இயற்றிய எதிரி 4 அவரது தீர்மானத்தின்படி சரிபார்த்திருந்தால் நகை இருப்பு அந்த விவரங்களை இவர் கண்டறிந்து இருக்க இயலும். இது தொடர்பாக இவரை விசாரித்ததில் இவரது வாக்குமூலம் நாள் 12.06.2015 ல் பக்கம் எண் 21 ல் மற்றும் 22 ல் தான் கையொப்பமிட்டுள்ளதை ஒப்புக்கொண்டுள்ளதுடன் 03.03.2014 ல் தீர்மானம் இயற்றப்பட்டிருந்தும் கூட தான் அதற்கான இருப்புகளை சரிபார்க்கவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும் இவரது வாக்குமூலம் பக்கம் எண் 26 ல் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து பணம் எடுப்பதற்கு சங்க செயலாளர் பொறுப்புடன் தானும் கையொப்பமிட வேண்டும் என 09.05.2013 தேதிய தீர்மானம் எண்.4 ன் படி உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியில் கொடுக்கப்பட்ட 13 தீர்மான உண்மை நகல்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதை நன்கு அறிந்திருந்தும் அவற்றை தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகம் மற்றும் அதை சார்ந்துள்ள மன்னார்குடி கிளைக்கு கொடுத்தும் இந்த தீர்மானங்களை செயலாக்கம் பெற்று அவ்வாறு செயலாக்கம் பெற்ற கடன்களிலிருந்து பொய் சான்றிதழ் கொடுத்து தொகையினை பெற்றும் நகையிருப்பை சரிபார்க்க முடிவு செய்து 03.03.2014 ல் தீர்மானம் நிறைவேற்றிருந்தும்

அதனை செயல்படுத்த தவறி தணிக்கைக்கு நகைக்கடன் தொடர்பாக உள்ள சான்றில் உண்மை நிலையை அறிந்து கொள்ளமால் கையொப்பமிட்டு கொடுத்தும எதிரி 1 தினகரனின் இத்தகைய கையாடலுக்கு எதிரி 4 உடந்தையாக செயல்பட்டுள்ளதால் இவ்வினத்தில் எதிரி 1 மற்றும் எதிரி 3 ஒருவருக்கொருவர் உடந்தையாக செயல்பட்டு ரூ.6,45,030/- ஐ கையாடல் செய்வதற்கு எதிரி 4 உடந்தையாக செயல்பட்டுள்ளார்.

**அரசு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதல் விசாரணை நிறுத்தப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.03.11 16:45:21 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்